**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**D051 தமிழகக் கலைகள்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காஞ்சிபுரத்தின் இயற்கையழகைக் கூறும் ஆற்றுப்படை நூல் எது?
2. கல்லணை யாரால் கட்டப்பட்டது?
3. பூம்புகாரின் சிறப்பு யாது?
4. இராஜேந்திர சோழனின் சிறப்புப் பெயர் யாது?
5. சோழர் காலம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
6. மண்ணீட்டாளர் எனச் சிலப்பதிகாரம் யாரைக் குறிப்பிடுகிறது?
7. பாண்டியர்களின் ஒரே ஒற்றைக்கல் இரதம் அமைந்த மாவட்டம் எது?
8. சுடுமண் சிற்பம் என அழைக்கப்படுவது எது?
9. சித்திர மண்டபம் என்பது யாது?
10. தமிழ்நாட்டு ஓவியக்கலையின் சிகரம் எது?
11. இராகம் – பழந்தமிழில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
12. சுந்தரரின் சிறப்புப்பெயர் யாது?
13. 'நாடக வழக்கினும்' என்று குறிப்பிட்ட நூல் எது?
14. வில்லைப் போன்ற வடிவத்தால் பெயர் பெற்ற இசைக்கருவியைக் கொண்டு பாடுவது எது?
15. கூத்த நூலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. அகழி என்பதன் பொருள் யாது? எங்கு அமைக்கப்பட்டிருக்கும்?
2. அல்லங்காடி என்றால் என்ன?
3. மும்மலங்கள் எவை?
4. பல்லவர்காலக் கோயில் அமைப்பு முறையின் வகைகளைக் கூறுக.
5. 'முத்தமிழ்' என்றால் என்ன?
6. நாடகத்திற்கான களமாக அமைந்த இலக்கியங்கள் எவை?
7. திரை (எழினி) எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. பழங்கால நாடக வகைகளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மூவேந்தர்களின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) பாண்டியர்களின் சிற்பக்கலை குறித்துக்கட்டுரைக்க.

2. (அ) தேவாரம் பாடிய மூவர் குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக.

(அல்லது)

(ஆ) நாடகக்கலை குறித்துக்கட்டுரைக்க.

3. (அ) கரகாட்டத்தின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் சிறப்பம்சங்கள் விவரி?

❋ ❋ ❋